<u>இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம்</u>

<u>சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.</u>

முன்னிலை:- திரு.S.முத்துராமன், B.L., தீர்ப்பாய நடுவர்,

2056 திருவள்ளுவராண்டு , ஸ்ரீ குரோதி வருடம், தை மாதம் 30 ம் நாள்

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ம் நாள் புதன் கிழமை

<u>இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை அசல் மனு எண்.125/2023</u>

<u>CNR No.TNTV05-000872-2023</u>

1. சுந்தரி
2. கலைசெல்வன்
3. சுபாஷினி ....மனுதாரர்கள்

எதிராக

1. மணிகண்டன்
2. மேலாளர், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட்,

சிவகாசி.

......எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது கடந்த 22.01.2025 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக வரப்பெற்று மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.சந்தோஷ் அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.ரேகா அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வருகையில்லாத் தரப்பினராக தீர்மானம் செய்யப்பட்டும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று (12.02.2025) வழங்கும்.....

<u>உத்தரவு</u>

கடந்த 20.11.2022 ம் தேதி மாலை 6.30 மணியளவில் நடந்த விபத்தில் 1ம் மனுதாரரின் கணவரும், 2 மற்றும் 3 ம் மனுதாரர்களின் தகப்பனாரான சாமிநாதன் என்பவர் சாலை விபத்தில் இறந்துவிட்டதால் ரூ.25,00,000/-ஐ பின்வட்டி மற்றும்

செலவுத் தொகையுடன் எதிர்மனுதாரர்களிடமிருந்து கிடைக்கக்கோரி திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவுகள் 140 மற்றும் 163A இயக்கவூர்தி தீர்ப்பாயத்தின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான தேதி	31.08.2023
உத்தரவு நாள்	12.02.2025
இழப்பீட்டுத்தொகை	ரூ.14,21,600/- (பதினான்கு இலட்சத்து இருபத்து ஓராயிரத்து அறுநூறு மட்டும்)
வட்டிவிகிதம் மற்றும் செலுத்தப்படவேண்டிய காலம்	கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதியான 11.09.2023 லிருந்து 1ம் மனுதாரருக்கு ரூ.8,21,600/-மும், மற்றும் 2 ம் மற்றும் 3ம் மனுதாரர்களுக்கு தலா ரூ.3,00,000/-மும் ஆக மொத்தம் வாகன விபத்து இழப்பீடாக ரூ.14,21,600/--மும் இழப்பீடாகதொகை வைப்பீடு செய்யப்படும் நாள் வரை 7.5% வட்டியுடன் சேர்த்து இன்றிலிருந்து 2 மாதத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் 1 முதல் 3 வரையிலான மனுதாரர்களுக்கு இழப்பீடாக இந்நீதிமன்ற வங்கி கணக்கில் (தவறுகையினால் தள்ளுபடியான காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக) வழங்க உத்தரவிடப்படுகிறது. 2 மாதத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற மன்னார்குடி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கணக்கு எண்.42904196244 (IFSC Code SBI N 0000872) கணக்கில் பணத்தை வைப்பீடு செய்துவிட்டு அதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். இழப்பீட்டு தொகையை 1 முதல் 3 மனுதாரர்கள் வங்கி கணக்கில் NEFT/RTGS மூலம் வழங்க வேண்டும் என்றும், மேற்படி வைப்பீடு செய்யப்பட்ட தொகையை 1 முதல் 3 மனுதாரர்கள் தங்களுடைய வங்கி கணக்கு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உரிய நீதிமன்ற உத்தரவின்படி

	வங்கியின் NEFT/RTGS பரிவர்த்தனை மூலமாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. விபத்தானது 2022-ல் ஏற்பட்ட காரணத்தினாலும் இழப்பீட்டு தொகை முழுவதையும் 2 ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்த பின்னர் 1 முதல் 3 வரையிலான மனுதாரர்கள் உடனே பெற்றுக் கொள்ளலாம் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய 1 முதல் 3 மனுதாரர்கள் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணத்தை உத்தரவு தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண்.C.R.P.No.1343 of 2012 நாள்.02.06.2016 MD TNSTC Salem Ltd., Versus Chinnadurai என்ற இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர் TDS க்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.
மொத்த நீதிமன்ற கட்டணம்	ரூ.13588.50
செலுத்திய நீதிமன்ற கட்டணம்	ரூ.372.50
மனுதாரர்கள் செலுத்தவேண்டிய நீதிமன்ற கட்டணம்	ரூ.(13216/- மட்டும்)
நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்கான காலம்	மனுதாரர்கள் இம்மனுவிற்காக செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணமான ரூ.13216/-ஐ உத்தரவு தேதியான 12.02.2025-லிருந்து 10 நாட்கள் காலகெடுவிற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்.
மனு தள்ளுபடியான காலம் ஏதேனும் உண்டா	இல்லை

2. மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம் :-

2.1) இம்மனுவில் இறந்துபோன சாமிநாதன் என்பவர் 54 வயது நிரம்பியவர் என்றும், டெல்டா என்ற கோழிக்கடையில் பணிப்புரிந்து மாதம் ரூ.15,000/- சம்பாதித்து குடும்பத்தை காப்பாற்றி வந்தார் என்றும், கடந்த 20.11.2022 ம் தேதியன்று மாலை சுமார் 6.30 மணியளவில் இறந்த சாமிநாதனும், செல்வராஜ் என்பவரும் இரவு டிபன் சாப்பிடுவதற்காக மன்னார்குடி - தஞ்சாவூர் நெடுவாக்கோட்டை மெயின்ரோட்டில் காளியம்மன் கோவில் அருகில் உள்ள ஹோட்டலுக்கு செல்வதற்காக கிளம்பி கிழக்கிலிருந்து மேற்காக நெடுவாக்கோட்டை மெயின்ரோட்டில் சாமிநாதனும், அவருக்கு பின்னார் செல்வராஜ் என்பவரும் நடந்து சென்று கொண்டிருந்தபோது பரமசிவம் மாடி வீட்டு அருகில் பின்னால் அதே திசையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 50 BY 3264 என்ற பதிவெண் கொண்ட TVS ZEST 110 என்ற இருச்சக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து சாமிநாதன் மீது மோதியதில் நிலைதடுமாறி கீழே விழுந்ததில் பின்தலையில் அடிப்பட்டு ரத்த காயத்தோடு கிடந்தவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டபோது மருத்துவர் பரிசோதித்து பார்த்தபோது அவர் இறந்துவிடடதாக கூறியதால் அவரது உடல் சடலக்கூராய்வு செய்யப்பட்டு அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும்,

2.2) இறந்துபோன சாமிநாதன் கோழிக்கடையில் வேலைப்பார்த்து ரூ.15,000/-ம் சம்பாதித்து குடும்பத்திற்கு உறுதுணையாக இருந்து பராமரித்து வந்தார் என்றும், மேற்படி இறந்துபோன சாமிநாதனை சார்ந்தும், நம்பியும் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்றும், மனுதாரர்கள் சாமிநாதன் இறந்ததால் குடும்பத்தார்கள் பற்று மற்றும் பாசத்தை இழந்துள்ளதாலும் 1ம் மற்றும் 2ம் எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ ரூ.25,00,000/-ம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்று கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம் :-

மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானவை என்றும், இந்த 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாததால்

அவர் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றும், மனுவில் சொல்லியுள்ளதுபோல 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவாக ஓட்டிவந்து நடந்து சென்ற சாமிநாதன் மீது மோதியதாக சொல்வது தவறு என்றும், விபத்து முழுக்க முழுக்க இறந்துபோனவரின் கவனக்குறைவாலேயே ஏற்பட்டுள்ளது என்றும், மனுவில் சொல்லியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றும், இறந்துபோன நபரின் கவனக்குறைவாலேயே விபத்து ஏற்பட்டுள்ளதால் இந்த எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்லர் என்றும், மனுதாரருடைய வயது , தொழில் வருமானம் மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றும், மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் நோட்டீஸ் சார்வு செய்யப்பட்டுள்ள நிலையில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் வருகையில்லாத் தரப்பினராக தீர்மானம் செய்யப்பட்டுள்ளார். மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மற்றும் எதிர்மனு உரை சங்கதிகளை பரிசீலனை செய்ததிலிருந்தும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பார்வையிட்டதிலிருந்தும் இந்நீதிமன்றம் பின்வருமாறு எழுவினாக்களை வனைகின்றது.

1. இந்த விபத்திற்கு யார் காரணம்? 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பது சரியா?
2. எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரா ?
3. மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய நியாயமான மற்றும் சரியான இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?
4. மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?

5. இம்மனுவில் இறந்துபோன சாமிநாதன் என்பவரின் மனைவியான 1ம் மனுதாரர் கலைசெல்வன் என்பவர் ம.சா.1 ஆகவும், செல்வராஜ் என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டும், ம.சா.1 தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் நிர்வாக

அதிகாரியாக பணிப்புரிந்து வரும் பெட்ரிக்ஸ் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டும், எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியிடு செய்யப்பட்டுள்ளது.

6. <u>பிரச்சினை எண்.1க்கு தீர்வு:-</u>

6.1) இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய மேற்படி பிரச்சனை குறித்து எழுந்துள்ள மெய்ப்பிக்கும் சுமையை தீர்க்கும் பொருட்டு இறந்துபோன சாமிநாதன் என்பவரின் மகனான 2ம் மனுதாரர் கலைச்செல்வன் என்பவர் ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரர் தரப்பு ம.சா.1 விசாரணை செய்யப்பட்டு அவர் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் நேரில் பார்த்த சாட்சி என்று செல்வராஜ் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். விபத்தினால் இறந்துபோன சாமிநாதன் என்பவின் வாரிசுகள் தான் மனுதாரர்கள் என்று ம.சா.ஆ.3 ஆவணத்தை பார்வையிடும்போது தெரிகிறது. மேலும். மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரும் மனுவில் விபத்து நடந்த விதத்தை நிரூபணம் செய்யும் முறை பற்றி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் <u>United India Insurance Co. Ltd Vs. Krishnaveni and others</u> என்ற வழக்கில் வழங்கி <u>2016(1) TN MAC 563 (DB)</u>-ல் பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பின் வழிக்காட்டுதலின்படி இந்த மனுவில் முடிவு செய்ய வேண்டியுள்ளது. மேற்படி முன்தீர்ப்பின் **<u>பத்தி 15 மற்றும் 16-ல்</u>** **<u>"15. Bimla Devi & Others Vs. Himachal RTC. 2009(1) TN MAC 700 (SC); 2009 (13) SCC 530</u>**. the Supreme Court held as follows;

"It was necessary to be borne in mind that strict proof of an accident caused by a particular bus in a particular manner may not be possible to be done by the Claimants. The Claimants were merely to establish their case on the touchstone of preponderance of probability. The standard of proof beyond reasonable doubt could not have been applied. For the said purpose, the high court should have taken into consideration the respective stories set forth by both the parties".

16. It is well settled law that proceedings before the Claimants Tribunal are summary in nature and it is suffice to consider. Whether there is any preponderance of probability, as to the manner of accident, as detailed in the Claim Petition. Strict proof of evidence is not required. In the absence of any rebuttal evidence, the finding of the Tribunal regarding negligence cannot be termed as perverse or it is not a case of no evidence."

என மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. ஆகவே இந்த மனுவிலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நெறிப்படுத்தியுள்ள வழிகாட்டுதலின்படி விபத்து நடந்த விதம் பற்றி மனுதாரர்கள் தங்களுடைய வழக்கின் சாத்திய கூறுகளின் மேம்பட்ட நிலையை (Preponderance of probabilities) நிரூபணம் செய்தாலே போதுமானது. குற்றவியல் வழக்குகளை போல சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

6.2) இந்த மனுதாரர் தரப்பு சாட்சியத்தை பார்க்கும்போது விபத்து நடந்தது உண்மை என்று தெரிகிறது. 2ம் எதிர்மனுதாரர் தன்னுடைய எதிருரையில் தெரிவிக்காத ஒரு சங்கதியை விபத்தில் நேரில் பார்த்த சாட்சியென விசாரிக்கப்பட்ட செல்வராஜ் என்பவரிடம் கேட்டுள்ளார். அதாவது இறந்துபோன சாமிநாதன் மதுவில் விஷம் கலந்து தற்கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் எதிரே வந்த வாகனத்தின் மீது விழுந்தார் என ஒரு கேள்வி கேட்கப்பட்டுள்ளது. வாதுரைகளில் சொல்லாத சங்கதிகளை கேள்வி கேட்க முடியாது. மேலும் எதிருரையில் இந்துபோன சாமிநாதன் இருச்சக்கர வாகனத்தில் சென்று நபர் என்பது போன்றே தெரிவிக்கப்பட்டுள்ளது. இறந்துபோன நபர் விபத்து சமயத்தில் மது அருந்தியுள்ளார் என்று தெரிகிறது. மது அருந்திவிட்டு வாகனம் தான் ஓட்டக் கூடாதே தவிர நடந்து செல்லக்கூடாது என்று எங்கும் இல்லை. அவ்வாறு ரோட்டில் நடந்து சென்றாலும் கூட மா.சா.ஆ.4 ஐ பார்க்கும்பொழுது சாமிநாதன் ரோட்டின் ஓரமாக சென்று கொண்டிருந்த சமயமே விபத்து ஏற்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு பதிவு செய்வதற்கு முன்னர் இறந்துபோன சாமிநாதன் மீது கொடுத்த வழக்கை மாற்றம் செய்ய எந்த நடவடிக்கையும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எடுக்கவில்லை. ஆகவே விஸ்ரா ரிப்போரட்டில் சொல்லியுள்ள காரணத்தை மட்டும் வைத்து இறந்ததற்கான காரணத்தை முடிவு செய்ய முடியாது. எதிர்மனுதாரர் தரப்பில எ.ம.சா.1 விசாரணை செய்யப்பட்டாலும் அவர்கள் நிறுவன இறுதி அறிக்கையில் இறந்துபோன நபரின் வயிற்றில் 200 கிராம் செரித்த உணவு இருந்தது என்றும், அதில் எந்த வாடையும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், விஸ்ரா அறிக்கையில் தலையில் ஏற்பட்ட காரணத்தாலும், அதிர்ச்சியாலும்,

ஆல்கஹால் உட்கொண்டதாலும் இறந்துபோனார் என் று காணப்படுகிறது என்றும், இறந்த நபர் ரோட்டின் குறுக்கே சென்றபோது விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கு முரண்பாடாக எதிருரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் கேள்வி கேட்கப்பட்டுள்ளது . ஆக வழக்கு ஆவணங்களை பரிசீலணை செய்ததில் 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலேயே விபத்து ஏற்பட்டுள்ளது என்று முடிவு செய்யப்படுகிறது. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டு ஒருவேளை இழப்பீடு 2ம் எதிர்மனுதாரர் வழங்க வேண்டுமென உத்தரவிட்டால் Pay on Recovery உத்தரவு வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கப்பட்டது. ஆனால் ம.சா.ஆ.5 ஐ பொறுத்தவரை ஓட்டுநர் உரிமம் ஒப்படைக்கப்படவில்லை என்று தான் குறிப்பிட்டுள்ளதே தவிர 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமமே இல்லை என்று குறிப்பிடப்படவில்லை . மேலும் அது சம்மந்தமாக சம்மந்தப்பட்ட அலுவலகத்தை விசாரிக்கவும் 2ம் எதிர்மனுதாரர் எந்த முயற்சியும் செய்யவில்லை. எனவே 2ம் எதிர்மனுதாரர் மட்டும் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்று முடிவு செய்யப்படுகிறது.

7. <u>பிரச்சனை எண்கள்.2 ,3 க்கு தீர்வு</u>:-

7.1) எழுவினாக்கள் 2 மற்றும் 3ம் ஒன்றையொன்று சார்ந்த எழுவினாக்கள் என்பதாலும், தீர்மானிக்கவேண்டிய சங்கதிகள் ஒரே சங்கதிகள் என்பதாலும், இந்த 2, 3 எழுவினாக்களை ஒருசேர தீர்மானிப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த மனுவில் 1 முதல் 3 மனுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டு தொகை எவ்வளவு என்பதை இனி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

7.2) விபத்தில் இறந்துபோன சாமிநாதன் என்பவர் டெல்டா என்ற கோழிக்கடையில் வேலைப்பார்த்து மாதம் ரூ.15,000/-ம் வருமானம் ஈட்டியதாக தெரிவித்தபோதிலும் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த மனுதார்கள் தான் இறந்துபோன சாமிநாதன் என்பவரின் வாரிசுகள் என்று தெரிகிறது. இறந்துபோன சாமிநாதனுக்கு விபத்து சமயம் 55 வயது என்று பிரேத பரிசோதனை அறிக்கையை பார்க்கும்பொழுது தெரிகிறது. ஆக ஆவணங்கள்

எதுவும் வருமானத்தை பொறுத்து தாக்கல் செய்யாத நிலையில் மனுதாரருடைய வயதை கருத்தில் கொண்டு அவர் மாதம் ரூ.12,000/-ம் வருமானம் பெற்றிருப்பார் என்றும், அதில் ¼ பாகம் செலவுகள் போக மாதம் ரூ.8000/-ம் வருமானம் ஈட்டியிருப்பார் என்று முடிவு செய்யப்படுகிறது. அ

7.3) மேலும் மேற்படி மாத வருமானத்திற்கு வருங்கால உயர்வாக மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் **National Insurance Company Limited Versus Pranay Sethi & others** என்ற வழக்கில் வழங்கி 2017(2) TNMAC 609 (SC)-ல் பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பின் வழிகாட்டுதலின்படி முடிவு செய்ய வேண்டியுள்ளது. அந்த முன்தீர்ப்பின் **பத்தி 61** (iii) & (iv) -ல் In view of the aforesaid analysis, we proceed to record our conclusions:-(iii) While determining the income, an addition of 50% of actual salary to the income of the deceased towards **future prospects**, where the deceased had a permanent job and was below the age of 40 years, should be made, The addition should be 30 % if the age of the deceased was between **40 to 50** years, In case the deceased was between the age of **50 to 60** years, the addition should be 15 % Actual salary should be read as actual salary less tax.

(iv) In case the deceased was self-employed or on a fixed salary, as addition of 40% of the established income should be the warrant where the deceased was below the age of 40 years. An addition of 25 % where the deceased was between the age of **40 to 50** years and 10 % where the deceased was between the age of **50 to 60** years should be regarded as the necessary method of computation. The established income means the income minus the tax component" என மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

7.4) ஆகவே மேற்கண்ட முன்தீர்ப்பில் மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் வழிகாட்டியுள்ளதன் அடிப்படையில் 55 வயதான இறந்துபோன சாமிநாதனுக்கு மாத வருமானத்திற்கு வருங்கால வருமான உயர்வாக (future prospects) 10% சதவீதம் கூட்டவேண்டும். ஆக மொத்தம் அவருடைய மாத வருமானம் ரூ.8000/- (8000+10%= Rs.8,800/-) ஆக இறந்து போனவரின் ஆண்டு வருமானம் Rs.1,05,600/- (Rs.8,800x12) ஆகும்.

7.5) மேற்கண்டவாறு இறந்துபோனவரின் ஆண்டு வருமானம் கணக்கீடு செய்யப்பட்ட நிலையில் அவருடைய வருமான இழப்பை கணக்கீடு செய்ய பயன்படுத்தப்பட வேண்டிய பெருக்கத்தினை (Multiplier) மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்றம் மேற்சொன்ன **Sarala verma & Others Versus Delhi Transport Corporation & Another** என்ற வழங்கப்பட்ட முன்தீர்ப்பின் வழிகாட்டுதலின் அடிப்படையில் முடிவு செய்யவேண்டும். அந்த முன்தீர்ப்பின் பத்தி - 21 ல்

"We therefore hold that the multiplier to be used should be as mentioned in column (4) of the Table above (preparred by applying Susamma Thomas, Trilok Chandra and Charlie). Which starts with an operative multiplier of 18 (for the age groups of 15 to 20 and 21 to 25 years), reduced by one unit for every five years, that is M-17 for 26 to 30 years,M-15 for 36 to 40 years, M-14 for 41 to 45 years, and M-13 for 46 to 50 years, then reduced by two units for every five years, that is M-11 for 51 to 55 years, M-9 for 56 to 60 years, M-7 for 61 to 65 years and M-5 for 66 to 70 years" என வழிவகை செய்துள்ளதன் அடிப்படையில் இறந்துபோன சாமிநாதன் என்பவருக்கு விபத்து சமயத்தில் 55 வயது என்பதால் பெருக்கமான (Multiplier) 11 ஐ பயன்படுத்த வேண்டும்.

7.6) கணவரை இழந்து வாடும் 1 ம் மனுதாரருக்கும், தகப்பனாரை இழந்து வாடும் 2 ம் மற்றும் 3 ம் மனுதாரர்களுக்கும் விபத்தின் போது ஏற்பட்ட மன அதிர்ச்சிக்காக ரூ.1,20,000/- வழங்கலாம் என்றும், பாசம் மற்றும் அன்பை இழந்த வகைக்காக ரூ.1,20,000/-மும், போக்குவரத்து செலவிற்கு ரூ.10,000/-மும், ஈமக்கிரியை காரியங்களுக்காக ரூ.10,000/- வழங்கலாம் என்றும் முடிவு செய்யப்படுகிறது.

8. மேற்கண்டவைகளை முழுமையாக ஆராயும்போது மனுதாரர்களுக்கு வழங்கப்படவேண்டிய இழப்பீட்டினை கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்து பகிர்ந்தளிக்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

இந்த தீர்ப்பாயத்தால் நிர்ணயம் செய்யப்பட்டு பகிர்ந்தளிப்பு செய்யப்படும் (Apportionment) இழப்பீடு பின்வருமாறு:

வ. எண்.	இழப்பீடு வழங்கப்படும் இனங்கள்	பகிர்ந்தளிப்பு செய்யப்படும் தொகை
1.	இறந்து போனவரின் ஆண்டு வருமானம் (1,05,600x11= Rs.11,61,600/-) =	Rs.11,61,600/-
2.	மன அதிர்ச்சிக்காக =	Rs.1,20,000/-
3.	அன்பு மற்றும் பாச இழப்பு =	Rs.1,20,000/-
4.	இறுதிச்சடங்கிற்கான செலவினங்கள் =	Rs.10,000/-
5.	போக்குவரத்து செலவினங்கள் =	Rs.10,000/-
	மொத்தம் =	Rs.14,21,600/-

9. இந்த மனுவில் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர்களுக்கு இழப்பீடாக மொத்தம் ரூ.14,21,600/- சரியான தகுந்த இழப்பீடு என முடிவு செய்து அதற்கு மனு தேதியிலிருந்து தொகை வசூலாகும் வரை தவறுகையினால் தள்ளுபடியாக காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக மீதி காலத்திற்கு 7.5% வட்டியுடன் சேர்த்து வழங்கி உத்தரவிட முடிவு செய்யப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையான நியாயமான தகுந்த இழப்பீட்டுத் தொகை எனவும் இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மனுதாரர்களுக்கு மேற்படி இழப்பீட்டு தொகையினை அவருக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் The Divisional Manager, The Oriental Insurance Company Ltd., Kannur Vs. Rajesh & Others என்ற வழக்கில் 2016(1) TN MAC 433-ல் பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பில் கண்ட வழிமுறைகளின்படி செலுத்த உத்தரவிட வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறாக பிரச்சனை எண்.3 க்கு தீர்வு காணப்படுகிறது.

10. <u>எழுவினா.4 :-</u>

வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மனுதாரருக்கு செலவுத் தொகையும், இழப்பீட்டுத் தொகையுடன் 7.5% வட்டித் தொகையும் கிடைக்கத்தக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

11. இறுதியாக மனு பகுதியாக செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டும், 1ம் மனுதாரருக்கு ரூ.8,21,000/-மும், மற்றும் 2ம் மற்றும் 3ம் மனுதாரர்களுக்கு தலா ரூ.3,00,000/-மும் ஆக மொத்தம் வாகன விபத்து இழப்பீடாக ரூ.14,21,600/--மும் இழப்பீடாக மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் முதல் தொகை வைப்பீடு செய்யப்படும் நாள் வரை 7.5% வட்டியுடன் சேர்த்து இன்றிலிருந்து 2 மாதத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் 1 முதல் 3 மனுதாரர்களுக்கு இழப்பீடாக இந்நீதிமன்ற வங்கி கணக்கில் (தவறுகையினால் தள்ளுபடியான காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக) வழங்க உத்தரவிடப்படுகிறது. 2 மாதத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற மன்னார்குடி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கணக்கு எண்.42904196244 (IFSC Code SBI N 0000872) கணக்கில் பணத்தை வைப்பீடு செய்துவிட்டு அதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். இழப்பீட்டு தொகையை 1 முதல் 3 மனுதாரர்கள் வங்கி கணக்கில் NEFT/RTGS மூலம் வழங்க வேண்டும் என்றும், மேற்படி வைப்பீடு செய்யப்பட்ட தொகையை 1 முதல் 3 மனுதாரர்கள் தங்களுடைய வங்கி கணக்கு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உரிய நீதிமன்ற உத்தரவின்படி வங்கியின் NEFT/RTGS பரிவர்த்தனை மூலமாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. விபத்தானது 2022-ல் ஏற்பட்ட காரணத்தினாலும் இழப்பீட்டு தொகை முழுவதையும் 2ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்த பின்னர் 1 முதல் 3 வரையிலான மனுதாரர்கள் உடனே பெற்றுக் கொள்ளலாம் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய 1 முதல் 3 மனுதாரர்கள் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணத்தை உத்தரவு தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண்.C.R.P.No.1343 of 2012 நாள்.02.06.2016 MD TNSTC Salem Ltd., Versus Chinnadurai என்ற இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர் TDS க்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 11.05.2020 ம் தேதி Tr. C.M.P.Nos. 264 to 281 of 2020 M/s Cholamandalam MS General Insurance Company Limited //vs//

Mr. Ayyannar.S and Others என்ற வழக்கில் வழங்கிய உத்தரவிக்கிணங்க தனியாக தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லபட்டு அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிப்பார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் 2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S MUTHURAMAN Digitally signed by S MUTHURAMAN Date: 2025.02.12 19:56:48 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை

தீர்ப்பாய நடுவர்/சார்பு நீதிபதி, மன்னார்குடி.

(இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம்)

செலவுத் தொகைப் பட்டியல்

மனுதாரர்தரப்பு செலவுத் தொகை பட்டியல்	தொகை	
	ரூ.	பை.
நீதிமன்ற கட்டணம்	13588	50
வக்காலத்து கட்டணம்	10	00
நீ.ம.ஆ.கட்டணம்	35	00
வழக்கறிஞர் கட்டணம்	21216	00
சம்மன்படி	13	50
தட்டச்சு கூலி	100	00
மொத்தம்	20537	00

(இம்மனுவின் செலவுத்தொகையான ரூ.20537/-ஐ 2 ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

பின் இணைப்பு:-

1. மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:-

ம.சா.1	கலைசெல்வன்	2 ம் மனுதாரர்
ம.சா.2	செல்வராஜ்	

2. மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:-

ம.சா.ஆ.1	21.11.2022	முதல் தகவல் அறிக்கை- உண்மை நகல்
ம.சா.ஆ.2	21.11.2022	சடலக்கூராய்வு அறிக்கை - நகல்
ம.சா.ஆ.3	03.01.2023	வாரிசு சான்று நகல்
ம.சா.ஆ.4	21.11.2022	வரைபடம் நகல்
ம.சா.ஆ.5	29.11.2022	TN 50 BY 3264 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை - நகல்
ம.சா.ஆ.6	24.09.2022-23.09.2022	காப்பீட்டு நகல்
ம.சா.ஆ.7	20.11.2022	விபத்து பதிவேடு (எ.ம.சா.1 தரப்பு குறுக்கு விசாரணையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது) நகல்

3. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:-

எ.ம.சா.1	பெட்ரிக்ஸ்	நிர்வாக அதிகாரி

4. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-

எ.ம.சா.ஆ.1	28.11.2024	2 ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பு - அலுவலக நகல்

எ.ம.சா.ஆ.2	---	1ம் எதிர்மனுதாரருக்கு சார்வு செய்த அஞ்சலக ஒப்புதல் அட்டை - அசல்
எ.ம.சா.ஆ.3	----	சடலக்கூராய் வு அறிக்கை நகல்

S MUTHURAMAN Digitally signed by S MUTHURAMAN
Date: 2025.02.12 19:56:58 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,

தீர்ப்பாய நடுவர்/சார்பு நீதிபதி, மன்னார்குடி.